**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 6 (செல்வம்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317—ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நான் வீட்டருகே உட்காந்திருந்தேன் சத்தம் கேட்டது ஓடி வந்து பார்த்தேன். என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் கையெழுத்து கேட்டதின் பேரில் போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. சுமாராக அங்கு 60 பேர் இருந்தோம். ஒரு கையெழுத்து மட்டும் செய்தேன். கையெழுத்து போட்டபிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் முதல் விசாரணை சங்கதிகளை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 8**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சத்தியசீலன் |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | ராமஜெயம் |
| ஊர் | : | அரசம்பட்டி |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | தலைமை காவலர் |
| மதம் | : | |
| வயது | : | 56 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பாரூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2011 ஆம் தேதி 14.40 மணிக்கு பாரூர் காவல் வட்ட ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் நிலைய குற்ற எண்.221/2016, சட்ட பிரிவுகள்.279, 337, 304(ஏ) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். இறந்து போன காசி என்கிற அரிசந்திரன் த/பெ.வெங்கட்ராமன் என்பவரதின் இறப்பின் உண்மை தன்மை அறிய ஒரு வேண்டுகோள் கடிதத்துடன் சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று மருத்துவ அலுவலரிடம் வேண்டுக்கோள் கடிதத்தை ஆஜர் செய்து பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை முடித்து அவர்கள் உறவினர்களிடம் குல வழக்கப்படி அடங்கம் செய்ய வேண்டி ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நிலையத்தில் இருந்து தான் சேலம் மருத்துவமனைக்கு சென்றேன். இறந்த நபர் யார் என்ற விவரம் எனக்கு காவல் ஆய்வாளர் கூறியதின் பேரில் தெரியும். எனக்கு

நேரடியாக தெரியாது. வேண்டுகோள் கடிதம் மதியம் 14.40 மணிக்கு பெற்றேன். சேலம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 16.30 மணியளவில் சென்றேன். நான் சொன்ன நேரத்தில் வேண்டுகோள் கடிதத்தை ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்தை உறவினர்கள் வசம் 17.30 மணியளவில் ஒப்படைத்தேன். நான் சொன்ன நேரத்தில் பிரேதத்தை ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் என்னை அன்றைய தினமே விசாரணை செய்தார். அன்றைய தினம் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அதிகாரி கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.